**கொழும்பு தேசிய நெடுஞ்சாலைகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றச் செயற்திட்டம் - 2018**

---

கொழும்பு தேசிய நெடுஞ்சாலைகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஜுன் 10 ஆந் திகதிய 15111பிபீ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சான தற்போதைய வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பைச் சூழவுள்ள 13 பிரதான தேசிய வீதிகளின் 65.45 கிலோமீற்றர்களை தரமுயர்த்துதல் மற்றும் நரஹேன்பிட்டிய – நுகேகொட வீதியின் மீள்நிர்மாணம் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,347.37 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 94.99 மில்லியனானதுடன் அதில் ரூபா 6,499.57 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 திசெம்பர் 11 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கள் திகதி 2020 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. பௌதீக முன்னேற்றம்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் வேலைப்பரப்பானது கொழும்பு மாவட்டத்திலுள்ள தேசிய வீதியின் 63.72 கிலோமீற்றர்களினை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் ஒப்பந்தப்பொதிகள் 07 இன் கீழ் அமுல்படுத்தப்பட்ட நாரகம்பிட்டி – நுகெகொட வீதியின் பால இல 2/1 ஆகியவற்றினை கொண்டிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 11 இல் ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்க பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 05 தேசிய வீதிகளின் 12.77 கிலோமீற்றர்களின் புனரமைப்பு வேலைகள் மற்றும் பாலத்தின் மேம்படுத்தல் என்பன 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | கொட்டாவ – தளகல வீதி, கோட்டே – போப்பே வீதி மற்றும் ஒருகொடவத்த – அம்பத்தல வீதி ஆகியவற்றின் புனரமைப்பு வேலைகளின் பௌதீக செயலாற்றல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 45 சதவீதத்தினையும் விட கீழாக காணப்பட்டது. | புனரமைப்பு வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு நேரம் எடுத்ததன் காரணமாக ஒப்பந்தக்கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | கொட்டாவ – தலகல மற்றும் கோட்டே – போப்பே வீதி என்பன காணி சுவீகரிப்பின் தாமதம் காரணமாக பிரதானமாக பட்டியலிடப்பட்டதற்கு மிகவும் பின்னோக்கி காணப்பட்டது. ஒருகொடவத்த – அமபத்தல வீதியின் செயலாற்றல் ஒப்பந்ததாரர், பயன்பாட்டு இடம்மாற்றல் மற்றும் காணிசுவீகரிப்பு காரணமாக பட்டியலிடப்பட்டதற்கு பின்னாக காணப்பட்டது. | செயற்திட்டத்தின் வீதி புனரமைப்பு வேலைகளின் வேலைப்பரப்பானது எதிர்பார்க்கப்பட்ட திகதிகளில் பூர்த்தியாக்குவதற்கு திட்டமிடப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒருகொடவத்த – அம்பத்தல வீதியின் புனரமைப்பு வேலைகளிற்கான ஒப்பந்தமானது 2017 ஜூலை 01 இல் ரூபா 1,528 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்ததாரரினால் புனரமைப்பு வேலைகள் மந்தகதியான செயலாற்றலுடன் நிறைவேற்றப்பட்ட போதிலும் ஒப்பந்த காலமானது 175 நாட்கள் நீடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அபராதத்தினை ஒப்பந்ததாரர் மீது தினிப்பதற்கான | ஒப்பந்தங்களின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | ஒருகொடவத்த – அம்பத்தல வீதியின் புனரமைப்பு வேலைகள் மீதான புதிய ஒப்பந்தமானது 2019 ஒக்டோபர் 01 இல் வழங்கப்பட்டிருந்தது. நாவின்ன – பொரல்லஸ்கமுவ வீதியினை மேம்படுத்த கடனில் போதியளவான ஒதுக்கீடுகள் காணப்படவில்லை. | மேலதிக கிரயங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சாத்தியப்பாடுகளை கவனத்தில் கொள்ளாது ஒப்பந்த உடன்படிக்கையானது 2018 ஒக்டோபர் 18 இலிருந்த அமுலாகுமாறு செயற்திட்டத்தினால் கைவிடப்பட்டிருந்தது. | | | |
| (இ) | ஏனைய வீதிகளின் 19.20 கிலோமீற்றர்களின் புனரமைப்பு வேலைகள், காணி சுவீகரிப்பில் காணப்பட்ட தாமதம் அதேவேளை செயற்திட்டத்தின் வேலைப்பரப்பிலிருந்து நாவின்ன – பொரலஸ்கமுவ வீதியின் 2.41 கிலோமீற்றர்களின் புனரமைப்பு வேலைகளின் நீக்கம் போன்ற காரணங்களினால் 2019 நவம்பர் 30 இல் உள்ளவாறு கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறிய படி. | பிலியன்தல – மஹரகம வீதி மற்றும் வலகம – தியகமார வீதி ஆகியவற்றின் புனரமைப்பு வேலைகள் காணி சுவீகரிப்பில் காணப்பட்ட தாமதம் காரணமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறிய படி. |

## 2.2 நிதி வளங்களின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| கடன் உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 6,499.57 மில்லியனிற்கு சமமான ஐ.அ. டொலர் 50 மில்லியனான ஒரு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 39.62 சதவிதத்தினைப் பிரதிநிதித்துப்படுத்தும் ரூபா 3,005.22 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 19.81 மில்லியன் மாத்திரமே 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 இல் காலாவதியாக பட்டியலிடப்பட்டிருந்த கடன் காலம் வேலைகள் மற்றும் நிதி பயன்பாடு என்பவற்றின் மீதான மந்தகதியான பௌதீக செயலாற்றல் காரணமாக 2020 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | ஒப்படைப்புக் கட்டணங்கள் மீது மேலதிக கிரயங்கள் ஏற்படுவதற்கான சாத்தியம். | உடன்படுகின்றேன். | ஒதுக்கீடுகளை கடன்காலம் காலாவதியாவதற்கு முன்னர் பயன்படுத்துவதற்கு நிதியியல் திட்டமானது கண்டிப்பாக கண்காணிக்கப்படல் வேண்டும். |

## 2.3 காணி சுவீகரிப்பின் மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 1,153 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 5,341 காணிதுண்டுகளை சுவீகரிக்க பட்டியலிடப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் 1,454 காணித்துண்டுகளிற்கு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் ரூபா 3,210 மில்லியன் தொகையான இழப்பீட்டு தொகை செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 காணித்துண்டுகள் மாத்திரமே காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், ரூபா 75.72 மில்லியன் தொகையான வட்டி இழப்பீட்டு கொடுப்பனவுகளில் காணப்பட்ட தாமதம் காரணமாக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | இழப்பீட்டு கொடுப்பனவினை செலுத்துவதன் மீதான வட்டி மீது மேலதிக கிரயங்கள் ஏற்படுவதற்கான சாத்தியம். | வட்டி செலுத்தியதன் பின்னர் மிகுதி துண்டுகளை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட திகதிகளில் பூர்த்தியாக்க முறையாக திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். |

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் அனுமதிக்கப்பட்ட ஆளனியினர் 24 பதவிகளினை கொண்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக செயற்திட்ட செயலாளர், பிரதி செயற்திட்ட பணிப்பாளர், மீள்வழங்கள் உத்தியோகத்தர் மற்றும் போக்குவரத்து முறைமை ஆய்வாளர் போன்ற முக்கிய நிர்வாக பதவிகள் 02 வருடங்களிற்கும் மேலாக வெற்றிடமாக காணப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளின் செயலாற்றல் மோசமாக பாதிக்கும். | கருத்துறைகள் பெறப்பட்டிருக்கவில்லை. | போதியளவான தகமைகள் மற்றும் திறன்களுடன் தேவையான உத்தியோகத்தர்கள் மென்மையான முறையில் செயற்திட்ட செயற்பாடுகளை அமுல்படுத்த ஆட்சேர்க்கப்படல் வேண்டும். |